பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

04 09 2025 THURSDAY 7.15 PM

## *தலைப்புச் செய்திகள்*

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, சிங்கப்பூர் பிரதமருடன் இன்று நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமான வகையில் அமைந்ததாக மத்திய அரசு கூறியுள்ளது.
2. உலகளாவிய பொருளாதார சவால்களை கருத்தில்கொண்டு, சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.
3. பள்ளி, கல்லூரி பாடத்திட்டங்களில் சாலை பாதுகாப்பு குறித்த பாடங்களை சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.
4. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பஞ்சாப் மக்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளது.
5. ஆசிய கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா - மலேசியா இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<<<>>>>>>>

சிங்கப்பூர் பிரதமர் திரு Lawrence Wong –வுடன், பிரதமர் திரு நரேந்திர மோடி விரிவான மற்றும் ஆக்கப்பூர்வமான பேச்சுக்கள் நடத்தியதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா வந்துள்ள சிங்கப்பூர் பிரதமருடன், திரு நரேந்திர மோடி நடத்திய இருதரப்பு பேச்சுக்கள் குறித்து புதுதில்லியில் வெளியுறவுத்துறை செயலாளர் திரு பி குமரன் செய்தியாளர்களிடம் பேசினார்.

இந்த சந்திப்பின்போது பசுமை மற்றும் டிஜிட்டல் கப்பல் தளத்தில் ஒத்துழைப்பு, விண்வெளித்துறையில் இணைந்து செயல்படுவது, பயிற்சியில் ஒத்துழைப்பு, விமான போக்குவரத்துத் துறையில் ஆராய்ச்சி

மற்றும் மேம்பாடு, டிஜிட்டல் புதுமை கண்டுபிடிப்பில் ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையே எட்டு முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

திறன் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் மருந்துத்துறை, பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தில் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று திரு குமரன் தெரிவித்தார்.

இதனிடையே, எல்லை தாண்டிய தீவிரவாதம் உள்ளிட்ட அனைத்து வடிவிலான தீவிரவாதத்தையும் முறியடிக்க இந்தியாவும் – சிங்கப்பூரும் உறுதிபூண்டுள்ளன.

<<<<<<<>>>>>>

உலகளாவிய பொருளாதார சவால்களை கருத்தில்கொண்டு, சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், GST கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டுள்ள மிக முக்கியமான பொருளாதார சீர்திருத்தம் இது என்று கூறினார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, இந்த சீர்திருத்தங்களால் பொதுமக்கள் பலனடைவார்கள் என்று திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

இதனிடையே, சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு தொழில்துறை பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த வர்த்தக தொழிற்சங்க நிர்வாகிகள் திரு தமிழரசு, திரு சங்கர் மாரிமுத்து ஆகியோர் எமது செய்தியாளரிடம், மத்திய அரசின் இந்த சீர்திருத்த அறிவிப்பை வரவேற்பதாக தெரிவித்தனர்.

*(Voice Byte – நிர்வாகிகள் – 45 Sec.)*

தேனி மாவட்டத்தை சேர்ந்த GST பயிற்சியாளர் திரு மகேந்திரனும் எமது செய்தியாளரிடம் மத்திய அரசின் அறிவிப்புக்கு வரவேற்பு தெரிவித்தார்.

*(Voice Byte –மகேந்திரன் – 30 Sec.)*

<<<<<<<<>>>>>>

சாலை பாதுகாப்பு குறித்து மாணவர்களுக்கு, அந்தந்த மாநில மொழிகளில் கற்பிக்க வேண்டியது முக்கியமான நடவடிக்கை என்று மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பள்ளி மற்றும் கல்லூரி பாடத்திட்டங்களில் அனைத்து மாநில மொழிகளிலும் சாலை பாதுகாப்பு குறித்த பாடங்களை ஒருங்கிணைப்பதற்கு கல்வி அமைச்சகத்துடன் இணைந்து தமது அமைச்சகம் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக கூறினார்.

சாலை விபத்துகளின் எண்ணிக்கையை குறைப்பதில் பொதுமக்களின் பங்களிப்புடன் அனைத்துத்தரப்பினரின் கூட்டு முயற்சியும் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளில் 18 வயது முதல் 45 வயதுக்கு உட்பட்டவர்கள் 66 சதவீதம் என தெரியவந்துள்ளதாகவும்,

விபத்துகளை தடுப்பதற்கான அதிநவீன கருவிகளை நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டிருப்பதாகவும் திரு நிதின்கட்கரி கூறினார்.

<<<<<<<>>>>>>>

ஓணம் பண்டிகை நாளை கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வசிக்கும் கேரள சகோதர, சகோதரிகளுக்கு தமது வாழ்த்துகள் என்றும், ஒற்றுமை, நல்லிணக்கத்தை பறைசாற்றும் ஓணம் பண்டிகை அறுவடை நாளாகவும் கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாளில் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தவும், நமது கலாச்சார பன்முகத்தன்மைக்கு மதிப்பு அளிப்பதற்கும் அனைவரும் உறுதியேற்போம் என்றும் குடியரசுத் தலைவர் அதில் கூறியுள்ளார்.

இதேபோல், நாளை ஆசிரியர் தினத்தையொட்டி, நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களுக்கும் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

மேலும், மிலாடி நபியையொட்டி, அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கும் குடியரசுத் தலைவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

உலகளாவிய பிரச்சினைகளை இந்தியாவும் – ஐரோப்பிய ஆணையமும் கூட்டாக சேர்ந்து எதிர்கொள்வது என முடிவு செய்துள்ளன.

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று ஐரோப்பிய கவுன்சில் த லைவர் திரு Antonio Costa மற்றும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் Ursula Von Der Leyen-வையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது இருதரப்பும் கூட்டாக சேர்ந்து பரஸ்பர முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது என முடிவு செய்ததாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>>

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பஞ்சாப் மாநில மக்களுக்கு அனைத்து உதவிகளையும் அரசு வழங்கும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

பஞ்சாபின் குர்தாஸ்பூர், அமிர்தசரஸ் மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அவர் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டிற்கு சேவையாற்றுவதிலும், மனிதாபிமான அடிப்படையிலும் பஞ்சாப் எப்போதும் முன்னணியில் திகழக்கூடியது என்று கூறினார்.

தற்போது மழை வெள்ளத்தால் கடினமான சூழலை இந்த மாநிலம் எதிர்கொண்டிருப்பதாகவும், பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், வயல்களில் வெள்ளநீர் தேங்கியுள்ளதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த தருணத்தில் அம்மாநில மக்களோடு மத்திய அரசு இணைந்து நிற்கும் என்று அவர் கூறினார்.

வெள்ள பாதிப்புகளை மதிப்பீடு செய்வதற்காக வேளாண் துறை, ஊரக வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் உயரதிகாரிகள் அடங்கிய இரண்டு மத்திய குழு பஞ்சாப் மாநிலத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த குழுவினர் நிலைமையை ஆய்வு செய்து மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடு குறித்து உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

நீதிபதிகள் திரு விக்ரம் நாத், திரு சந்தீப் மேத்தா அடங்கிய அமர்வு இதுகுறித்து விசாரணை மேற்கொண்டது.

ராஜஸ்தான் மாநிலத்தில் நடப்பாண்டின் முதல் எட்டு மாதங்களில், காவல்நிலைய விசாரணைக்கைதிகள் 11 பேர் உயிரிழந்திருப்பதாக வெளியான செய்திகளின் அடிப்படையில் இந்த விசாரணை நடைபெறுகிறது.

பெரும்பாலான காவல் நிலைய மரண வழக்குகளில் சிசிடிவி பதிவுகள் காவல்துறையினரால் சமர்ப்பிக்கப்படுவதில்லை என்றும், இதற்கு கேமராக்கள் செயல்படாததே காரணம் என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இதுபோன்ற நிலையை தடுக்க காவல் நிலையங்களில் வெளிப்படையான விசாரணை நடைபெறுவதை உறுதி செய்ய சிசிடிவி கேமராக்கள் அமைக்க வேண்டியது அவசியம் என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

எனவே, காவல் நிலைய தலைமை அதிகாரிகள் கண்காணிப்பு கேமராவில் பதிவாகும் தகவல்களை பராமரிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் நீதிபதிகள் கேட்டுக்கொண்டனர்.

மாநில அரசுகளும் கேமராக்கள் பொருத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என அவர்கள் அறிவுறுத்தினர்.

<<<<<<<>>>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

ஆசிய கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

பீகாரின் *Rajgir* –ல் இப்போட்டி, இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

----------------

உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டி இங்கிலாந்தின் *Liverpool* நகரில் இன்று தொடங்கியது.

முதல் சுற்று ஆட்டத்தில் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் Pawan Bartwal வெற்றிபெற்றார்.

----------------

உலக *Wushu* சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Sagar Dahiya* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பிரேசிலில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் *56* கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் வெற்றிபெற்றார்.

<<<<<<<>>>>>>